குற்ற வழக்குத் தொடர்வுத் துறை

**<u>சென்னை குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் (பொ)அவர்களின்</u>**
**<u>செயல்முறை ஆணைகள்</u>**
**<u>முன்னிலை திருமதி.கோ.சித்ராதேவி, எம்.ஏ.,பி.எல்.,</u>**

**ந.க.எண். 1631/குவதொஇ/அ2/2020–5 நாள். 23/11/2020.**
**(இயக்கக ஆணை எண் . 86 /2020)**

| | |
|---|---|
| சிறு தலைப்பு : | பொதுப்பணிகள் – குற்ற வழக்குத் தொடர்வுத் துறை – திருமதி. லோ. நித்யா, இளநிலை உதவியாளர், சென்னை குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் அலுவலகம் – பணிவரன்முறை செய்து (தகுதிகாண் பருவம் தொடங்கும் நாள்) ஆணை வழங்குதல் தொடர்பாக. |
| படிக்கவும் : | 1) சென்னை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதங்கள் எண் 2455/பிஎஸ்டி–1/2020 நாள் 30–05–2020 .<br>2) இவ்வியக்கக செயல்முறை ஆணை ந.க.எண், 1631/குவதொஇ/அ2/2020 –5, இயக்கக ஆணை எண் 53/2020 நாள் 23–07–2020.<br>3) திருமதி. லோ.நித்யா, இளநிலை உதவியாளர், சென்னை குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் அலுவலகம் என்பவர் பணிக்கு அறிக்கை செய்த நாள் 29/07/2020பிற்பகல் |

**<u>ஆணை:</u>**

பார்வை ஒன்று மற்றும் இரண்டில் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைபக் கடிதம் மற்றும் இயக்கக பணி நியமன ஆணையின் படி திருமதி. லோ. நித்யா, அவர்கள் இளநிலை உதவியாளராக சென்னை குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் அலுவலகத்தில் பணி நியமனம் செய்யப்பட்டார். மேற்படி ஆணையின்படி தனியர் 29/07/2020 அன்று பிற்பகல் முதல் சென்னை குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிக்கு அறிக்கை செய்து பணிபுரிந்து வருகிறார்

தொடர்கிறது–––––

2) எனவே, திருமதி. லோ. நித்யா, இளநிலை உதவியாளர், குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களது இளநிலை உதவியாளர் பணிநியமனத்தை தனியர் பணிக்கு அறிக்கை செய்த நாள் முதல் பின்வருமாறு வரன்முறை செய்து (தகுதிகாண் பருவம் தொடங்கும் நாள்) ஆணையிடப்படுகிறது.

| **வரிசை எண்** | **பெயர்/பதவி/பணிபுரியும் அலுவலகம்** | **பணிக்கு அறிக்கை செய்த நாள்** | **பணிவரன்முறை செய்த நாள் (தகுதிகாண் பருவம் தொடங்கும் நாள்)** |
|---|---|---|---|
| 1. | திருமதி. லோ. நித்யா, இளநிலை உதவியாளர், சென்னை கு.வ.தொ. இயக்குநர் அலுவலகம் | **29/07/2020** பிற்பகல் | **29/07/2020** பிற்பகல் |

3) மேற்படி பணிவரன்முறையானது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம்/மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் தொகுதி 4–ல் அடங்கிய ஒருங்கிணைந்த குடிமையியல் பணிகளுக்கான தேர்வு 2018–19 மற்றும் 2019–2020 ஆம் ஆண்டிற்கான ஆள் தேர்ந்தெடுப்பு தொடர்பாக தொடுக்கப்பட்டு நிலுவையில் உள்ள நீதிப் பேராணை மனுக்கள் மீதான தீர்ப்புரைக்கு உட்பட்டதாக அமையும்.

4) மேற்படி தனியரது பணியினை பணிவரன்முறை செய்யப்பட்டு, (தகுதிகாண் பருவம் தொடங்கும் நாள்) மூன்றாண்டுகள் தொடர்ந்த பணிக்காலத்தில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். இவரது இரண்டாண்டு கால தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வினை எழுதி தேர்ச்சி பெறுதல் வேண்டும். மேலும் பவானிசாகர் அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு அப்பயிற்சியில் தேர்ச்சி அடைதல் வேண்டும்.

தொடர்கிறது––––

5) மேலும் மேற்படி தனியர் இளநிலை உதவியாளர் நிலையிலிருந்து உதவியாளராக பதவி உயர்வு பெறுவதற்கு சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம் 1–ல் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

6) எனவே திருமதி. லோ. நித்யா, இளநிலை உதவியாளர், குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களின் பணி நியமனத்தை, பணிவரன்முறை செய்யப்பட்ட (தகுதிகாண் பருவம் தொடங்கும் நாள் முதல்) விவரத்தினை தனியரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய அ2 இருக்கை எழுத்தர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

24-11-2020

இயக்குநர்(பொ),
கு.வ.தொ.துறை, சென்னை–5.

24/11/2020

பெறுநர்

திருமதி. லோ. நித்யா,
இளநிலை உதவியாளர்,
கு.வ.தொ. இயக்குநர் அலுவலகம் ,
சென்னை – உரிய வழி முறையாக.

**நகல் :** அ2 இருக்கை எழுத்தர் தனியரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய

**நகல் :** செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.
**நகல் :** இயக்கக ஆணைப் பத்தகம்/கோப்புக்கு/இருப்புக் கோப்புக்கு/உபரி.